பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 11

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 20

மதிப்புரை / 25

தமிழாக்கியவர்களின் முன்னுரை / 31

மூலநூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு / 35

ஆய்வறிஞர் முன்னுரை / 40

1 அடியார்கள்மீது இருக்கின்ற அல்லாஹ்வின் உரிமையை உரக்கச் சொல்லும் ஏகத்துவப் புத்தகம் / 51

2 தவ்ஹீதின் சிறப்பும் அதனால் கிடைக்கும் பாவப் பரிகாரமும் / 63

3 தவ்ஹீதை உண்மைப்படுத்தி முழுமை அடைந்தவர் கேள்விக்கணக்கு மற்றும் தண்டனை இல்லாமலே சொர்க்கம் புகுவார் / 69

4 இணைவைப்பு குறித்து அச்சப்படுதல் / 75

5 வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை என்று சாட்சியம் கூறுவதன்பால் மக்களை அழைத்தல் / 78

6 தவ்ஹீதின் விளக்கமும் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஷஹாதா கலிமாவின் விரிவுரையும் / 84

7 வளையம், கயிறு மற்றும் அவை போன்றவற்றை ஆபத்தை நீக்குவதற்கும், அது வராமல் தடுத்துக்கொள்வதற்கும் அணிந்துகொள்வது ஷிர்க்கில் உட்பட்டதாகும் / 90

8 ஓதிப்பார்த்தல் மற்றும் தாயத்துகள் அணிதல் பற்றி வந்துள்ள சட்டங்கள் / 94

9 மரம், கல் மற்றும் இவை போன்றவை மூலம் பரக்கத்தைத் தேடுதல் / 98

10 அல்லாஹ் அல்லாதவருக்கு அறுத்துப் பலியிடுவது பற்றி வந்தவை / 103

11 அல்லாஹ் அல்லாதவர்களுக்குப் பலியிடுமிடத்தில் அல்லாஹ்வுக்குக் குர்பானீ (பலி) கொடுக்கக் கூடாது / 108

12 அல்லாஹ் அல்லாதவருக்கு நேர்ச்சை செய்வது ஷிர்க்கான காரியங்களாகும் / 112

13 அல்லாஹ்வை விடுத்து மற்றவரிடத்தில் பாதுகாவல் தேடுதல் ஷிர்க்கான காரியங்களாகும் / 114

14 அல்லாஹ் அல்லாதவரைக்கொண்டு இரட்சிக்கத் தேடுவதும் அல்லது அவனல்லாதவரை அழைத்துப் பிரார்த்திப்பதும் ஷிர்க்கான காரியங்களாகும் / 116

15 'எதையும் படைக்காதவற்றையா அவர்கள் இணையாக்குகின்றனர்?' எனும் இறைவசனம் / 121

16 'அவர்களின் இதயங்களிலிருந்து நடுக்கம் நீக்கப்படுமானால்' எனும் இறைவசனம் / 127

17 ஷஃபாஅத் – பரிந்துரைத்தல் / 133

18 'நீர் விரும்பியோரை நேர்வழி செலுத்திவிட முடியாது' எனும் இறைவசனம் / 138

19 ஆதமின் மக்கள் இறைநிராகரிப்பில் விழுவதற்கும், தங்களின் மார்க்கத்தை விட்டுவிடுவதற்கும் காரணமாக இருப்பது நல்லவர்களைக் கண்ணியப்படுத்துவதில் அவர்கள் வரம்புமீறியதே / 142

20 அல்லாஹ்வை வணங்குவதாக இருப்பினும் அதை ஒரு நல்லவரின் சமாதியில் செய்வதும் தடுக்கப்பட்டது என்று எச்சரிக்கை இருக்க, அந்தச் சமாதிக்காரரையே வணங்கினால் என்னவாகும்? / 148

21 நல்லோர்களின் சமாதிகளில் வரம்புமீறுவது அவர்களை அல்லாஹ்வைத் தவிர்த்து வணங்கப்படும் சிலைகளாக மாற்றிவிடுகின்றது / 157

22 நபி முஸ்தஃபா ﷺ அவர்கள் தவ்ஹீதுடைய வெளிப்புறத்தைப் பாதுகாத்ததிலும், ஷிர்க்கின்பால் சேர்த்து வைக்கின்ற ஒவ்வொரு வழியையும் அவர்கள் அடைத்திருப்பதிலும் வந்துள்ள ஆதாரங்கள் / 160

23 'நிச்சயமாக இந்த உம்மத்தவர்களில் சிலர் சிலைகளை வணங்குவார்கள்' என்பது பற்றிய விவரம் / 164

24 ஸிஹ்ரு - சூனியம் குறித்த விவரம் / 171

25 சூனியத்தின் வகைகளில் சிலவற்றைப் பற்றிய விளக்கம் / 174

26 சோதிடர்கள் மற்றும் அவர்களைப்
போன்றவர்கள் பற்றிய விவரம் / 177

27 சூனியத்தை எடுப்பது பற்றிய சட்டம் / 180

28 துர்ச்சகுனம் பார்ப்பது பற்றிய விவரம் / 182

29 வான சாஸ்திரம் கற்பதைப் பற்றிய விவரம் / 187

30 வானில் உதயமாகும் நட்சத்திரங்களின் பொருட்டு மழையை
வேண்டுதல் பற்றிய விவரம் / 189

31 'அல்லாஹ்வை விடுத்து அவனுக்கு இணையாளர்களை
எடுத்துக்கொள்பவர்களும் மனிதர்களில் இருக்கின்றனர்' எனும்
இறைவசனம் / 193

32 'இப்படிச் செய்தது ஒரு ஷைத்தான்தான். அவன் தன்
நண்பர்களைப் பற்றி பயமுறுத்துகிறான்'
எனும் இறைவசனம் / 198

33 'நீங்கள் விசுவாசிகளாக இருந்தால், அல்லாஹ்வின்மீதே பொறுப்புச்
சாட்டுங்கள்' எனும் இறைவசனம் / 201

34 'அல்லாஹ்வின் சூழ்ச்சியைவிட்டு அவர்கள் அச்சமற்று
இருக்கின்றனரா?' எனும் இறைவசனம் / 204

35 அல்லாஹ் விதித்த விதிகளின்மீது பொறுமையாக இருப்பது
அல்லாஹ்வை நம்பிக்கைகொள்வதில் உள்ளதாகும் / 206

36 முகத்துதி குறித்து வந்துள்ளவை / 210

37 தான் செய்யும் நற்செயலைக்கொண்டு உலக வாழ்க்கையை
மனிதன் நாடுவது ஷிர்க்கான காரியங்களாகும் / 213

38 அல்லாஹ் ஹலாலாக்கியதை ஹறாமாக்கும் விசயத்தில் அல்லது
அவன் ஹறாமாக்கியதை ஹலாலாக்கும் விசயத்தில் மக்கள்
உலமாக்களுக்கோ, தலைவர்களுக்கோ கீழ்ப்படிவார்களாயின்
அம்மக்கள் அவர்களைத் தங்களின் கடவுளர்களாக
ஆக்கிக்கொண்டவர்கள் ஆவர் என்பதைப்
பற்றிய விவரம் / 216

39 'மெய்யாகவே தாங்கள் விசுவாசிப்பதாக
நினைத்துக்கொண்டிருப்போரை நீர் பார்க்கவில்லையா?'
எனும் இறைவசனம் / 220

40 அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளில் ஒன்றை
மறுப்பவரை பற்றிய விவரம் / 226

41 'அல்லாஹ்வின் அருட்கொடையை அறிகின்றனர். பின்னர்
அதனை நிராகரிக்கின்றனர்' எனும் இறைவசனம் / 229

42 'அறிந்துகொண்டே அல்லாஹ்வுக்கு இணைகளை ஆக்காதீர்கள்' எனும் இறைவசனம் / 231

43 ஒரு விசயத்தில் அல்லாஹ்வைக்கொண்டு சத்தியம் செய்தும் அதைத் திருப்திபடாதவர் / 234

44 அல்லாஹ் நாடியதும், நீர் நாடியதும் நடந்தது என்ற வாக்கியம் / 235

45 காலத்தை ஏசியவர் அல்லாஹ்வை சங்கடப்படுத்தியவராவார் / 239

46 காழில் குழாத் - நீதிபதிகளுக்கெல்லாம் பெரிய நீதிபதி என்பன போன்ற பெயர்கள் / 241

47 உயர்ந்தோனாகிய அல்லாஹ்வின் பெயர்களை மதித்தல்; அதன் நிமித்தம் ஒருவரின் பெயரை மாற்றிவிடுதல் / 243

48 அல்லாஹ், ரஸூல், குர்ஆன் முதலியவற்றை பரிகாசமாகப் பேசுகிறவர் / 245

49 'அவனைத் தொட்டிருந்த கெடுதிக்குப் பின்னர், நம்மிடமிருந்து அருளை அவனுக்கு நாம் சுவைக்கச் செய்தால்' எனும் இறைவசனம் / 248

50 'அவ்விருவருக்கும் நல்ல (சந்ததியான)தை அவன் கொடுத்தபோது' எனும் இறைவசனம் / 255

51 'அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் உண்டு. ஆகவே, அவற்றைக்கொண்டே அவனை அழைத்துப் பிரார்த்தியுங்கள்' எனும் இறைவசனம் / 259

52 'அஸ்ஸலாமு அலல்லாஹ்' என்று கூறுவது கூடாது / 261

53 'அல்லாஹ்வே! நீ நாடினால் மன்னிப்பாயாக' என்று பிரார்த்திப்பது கூடாது / 263

54 ஒருவர் தன் பணியாட்களைப் பார்த்து 'இவர் என் அடிமை, இவள் என் அடிமைப்பெண்' எனச் சொல்வது கூடாது / 265

55 அல்லாஹ்வின் பெயரைக் கூறிக் கேட்பவருக்கு இல்லையென சொல்லக் கூடாது / 267

56 அல்லாஹ்வின் திருமுகத்தைக்கொண்டு சொர்க்கத்தைத் தவிர வேறொன்றையும் கேட்கக் கூடாது / 269

57 இடையூறு ஏற்படும்போது 'இவ்வாறு செய்திருந்தால், அவ்வாறு செய்திருந்தால் ஏற்பட்டிருக்காதே' எனச் சொல்வது கூடாது / 270

58 காற்றை ஏசுவதற்கு வந்துள்ள தடை / 272

59 'அல்லாஹ்வைப்பற்றி உண்மை அல்லாததை எண்ணினார்கள்'

எனும் இறைவசனம் / 274
60 விதியை மறுப்போர் பற்றி வந்துள்ளவை / 277
61 உருவம் வரைவோரைப் பற்றிய விவரம் / 281
62 அதிகமாகச் சத்தியம் செய்வதைப் பற்றிய விவரம் / 284
63 அல்லாஹ்வின் உடன்படிக்கை மற்றும் அவனுடைய நபியின் உடன்படிக்கை பற்றிய விவரம் / 288
64 அல்லாஹ்வின்மீது சத்தியம் செய்வதைப் பற்றிய விவரம் / 292
65 அல்லாஹ்வைக்கொண்டு அடியார்களிடம் சிபாரிசு வேண்டுதல் கூடாது / 294
66 நபி முஸ்தஃபா ﷺ அவர்கள் தவ்ஹீதுடைய பகுதியைப் பாதுகாத்து, ஷிர்க்குடைய பாதைகளை அவர்கள் அடைத்தது பற்றி வந்துள்ளவை / 296
67 'அல்லாஹ்வை அவனுடைய கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் மதிப்பளிக்கவில்லை' எனும் இறைவசனம் தொடர்பாக வந்துள்ளவை / 298

2

بَابُ بَيَانِ فَضْلِ التَّوْحِيدِ وَمَا يُكَفِّرُ مِنَ الذُّنُوبِ

தவ்ஹீதின் சிறப்பும்
அதனால் கிடைக்கும் பாவப் பரிகாரமும்

❀

திருக்குர்ஆன் ஆதாரம்

الَّذِينَ آمَنُوا وَلَمْ يَلْبِسُوا إِيمَانَهُمْ بِظُلْمٍ أُولَئِكَ لَهُمُ الْأَمْنُ وَهُمْ مُهْتَدُونَ

விசுவாசம் கொண்டு பின்னர் தங்களுடைய ஈமானில் (இணை வைத்தல் எனும்) அநீதத்தைக்கொண்டு கலந்துவிடவில்லையே அத்தகையோருக்கே அல்லாஹ்விடம் பாதுகாப்பு உண்டு; அவர்களே நேர்வழி பெற்றவர்கள். (குர்ஆன் 6:82)[21]

நபிவழி ஆதாரங்கள்

مَنْ شَهِدَ أَنْ لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، وَأَنَّ عِيسَى عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ، وَكَلِمَتُهُ أَلْقَاهَا إِلَى مَرْيَمَ وَرُوحٌ مِنْهُ، وَالجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، أَدْخَلَهُ اللَّهُ الجَنَّةَ عَلَى مَا كَانَ مِنَ العَمَلِ

1. அல்லாஹ்வைத் தவிர்த்து வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை; அவன் தனித்தவன்; இணை இல்லா

21 இந்தத் திருவசனம் இறங்கிய பின் நபித்தோழர்கள் அனைவரும், 'நம்மில் எவர்தான் அநீதி இழைக்கவில்லை?' என்று கூறியவாறு, 'அல்லாஹ்வின் அபயம் நமக்குக் கிடைக்காது. நாம் நேர்வழி பெற்றவர்களாகவும் ஆக முடியாதே என்று விரக்தியும் நிராசையும் கொண்டவர்களாகக் கூறினார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள், 'அல்லாஹ்வுக்கு இணைவைப்பதுதான் பெரும் அநீதி, அக்கிரமமாகும்' என்று கூறினார்கள். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ, புகாரீ 3360)

4

بَابُ الْخَوْفِ مِنَ الشِّرْكِ

இணைவைப்பு குறித்து அச்சப்படுதல்

❀

திருக்குர்ஆன் ஆதாரங்கள்

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ وَمَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدِ افْتَرَى إِثْمًا عَظِيمًا

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவேமாட்டான். இதனைத் தவிர மற்ற எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான். எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறாரோ அவர், திட்டமாக மகத்தான பாவத்தைப் பொய்யாகக் கற்பனை செய்துவிட்டார். (குர்ஆன் 4:48)

وَمَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ ضَلَّ ضَلَالًا بَعِيدًا

யார் அல்லாஹ்வுக்கு இணைவைப்பாரோ அவர் திட்டமாக வெகு தூரமான வழிகேடாக வழிகெட்டுவிட்டார். (4:116)

وَإِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّ اجْعَلْ هَذَا الْبَلَدَ آمِنًا وَاجْنُبْنِي وَبَنِيَّ أَنْ نَعْبُدَ الْأَصْنَامَ

இப்றாஹீம், 'என்னுடைய இரட்சகனே! மக்காவாகிய இந்த ஊரை அபயம் அளிக்கக்கூடியதாய் நீ ஆக்கிவைப்பாயாக. மேலும், என்னையும் என் மக்களையும் சிலைகளை வணங்குவதிலிருந்து தூரப்படுத்துவாயாக' என்று கூறியதை நபியே! நீர் நினைவுகூர்வீராக![30] (குர்ஆன் 14:35)

30 நபி இப்றாஹீம் ﷺ அவர்கள் தங்களின் வழித்தோன்றல்கள் ஷிர்க்கில் விழுந்துவிடலாமென அஞ்சிய காரணத்தால் அதைவிட்டும் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடத்தில் துஆ செய்தார்கள். நபிமார்களின் சமூகத்தார்கள்

6

بابُ تَفْسِيرِ التَّوْحِيدِ وَشَهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ

தவ்ஹீதின் விளக்கமும்
லா இலாஹ இல்லல்லாஹ் என்னும்
ஷஹாதா கலிமாவின் விரிவுரையும்

❀

திருக்குர்ஆன் ஆதாரங்கள்

قُلِ ادْعُوا الَّذِينَ زَعَمْتُمْ مِنْ دُونِهِ فَلَا يَمْلِكُونَ كَشْفَ الضُّرِّ عَنْكُمْ وَلَا تَحْوِيلًا أُولَئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَى رَبِّهِمُ الْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا

அல்லாஹ்வைத் தவிர (வேறு வணக்கத்திற்குரியவர்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அத்தகையவர்களை நீங்கள் (உங்கள் கஷ்டங்களை நீக்க) அழையுங்கள்; (அவ்வாறு அழைத்தாலும்) அவர்கள் உங்களை விட்டும் யாதொரு கஷ்டத்தை நீக்கிவைக்கவும் (அதனைத்) திருப்பிவிடவும் சக்தி பெறமாட்டார்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக.[35]

எவர்களை (இணைவைத்துக்கொண்டிருப்போரான) அவர்கள் அழைக்கிறார்களோ அத்தகையோர் தங்கள் இரட்சகனின்பால் (நற்செயல்கள் செய்வது கொண்டு) அவர்களில் யார் மிக்க நெருக்கமானவர்கள் என்று நெருக்கத்தைத் தேடுகிறார்கள்; அவனது அருளை ஆதரவும் வைக்கிறார்கள்; அவனது வேதனையைப் பயப்படவும் செய்கிறார்கள். நிச்சயமாக உமது

35 கஷ்டத்தை நீக்கவோ, திருப்பிவிடவோ ஆற்றல் பெற்றவன் அல்லாஹ் ஒருவன்தான். அவனை விடுத்து எந்த வானவர்களாலும், அல்லாஹ்வின் நேசர்களாலும் இவற்றில் தலையிட முடியாது.

9

بَاب مَنْ تَبَرَّكَ بِشَجَرَةٍ أَوْ حَجَرٍ وَنَحْوِهِمَا

மரம், கல் மற்றும் இவை போன்றவை மூலம் பரக்கத்தைத் தேடுதல்

❀

திருக்குர்ஆன் ஆதாரங்கள்

أَفَرَأَيْتُمُ اللَّاتَ وَالْعُزَّى وَمَنَاةَ الثَّالِثَةَ الْأُخْرَى أَلَكُمُ الذَّكَرُ وَلَهُ الْأُنْثَى تِلْكَ إِذًا قِسْمَةٌ ضِيزَى إِنْ هِيَ إِلَّا أَسْمَاءٌ سَمَّيْتُمُوهَا أَنْتُمْ وَآبَاؤُكُمْ مَا أَنْزَلَ اللَّهُ بِهَا مِنْ سُلْطَانٍ إِنْ يَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ وَمَا تَهْوَى الْأَنْفُسُ وَلَقَدْ جَاءَهُمْ مِنْ رَبِّهِمُ الْهُدَى

நீங்கள் (வணங்கும்) லாத்தையும் உஸ்ஸாவையும் கண்டீர் களா? மற்றொன்றாகிய மூன்றாவதான மனாத்(தெனும் பெண் விக்கிரகத்)தையும் (நீங்கள் கண்டீர்களா?) உங்களுக்கு ஆண்(மக்)கள், (அல்லாஹ்வாகிய) அவனுக்குப் பெண்(மக்) களா? அவ்வாறாயின், அது இன்னும், மிக்க அநியாயமான பங்கீடாகும். இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதை யரும் வைத்துக்கொண்ட (வெறும்) பெயர்களே தவிர இல்லை; அ(வை தெய்வங்களென்ப)தற்காக அல்லாஹ் யாதொரு சான்றையும் (முந்திய எந்த வேதத்திலும்) இறக்கி வைக்க வில்லை. அவர்கள் வீண் எண்ணத்தையும், மனங்கள் விரும்பு வனவற்றையும் தவிர வேறு எதையும் பின்பற்றவில்லை; நிச்சயமாக அவர்கள் இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு நேர்வழி வந்துவிட்டது. (ஆனால், அதனை அவர்கள் பின் பற்றுவதில்லை.) – குர்ஆன் *53:19-23*

நபிவழி ஆதாரம்

அபூ வாக்கிது அல்லைஸீ ﷺ அறிவிக்கிறார்கள்:

14

بَابُ مِنَ الشِّرْكِ أَنْ يَسْتَغِيثَ بِغَيْرِ اللهِ أَوْ يَدْعُوَ غَيْرَهُ

அல்லாஹ் அல்லாதவரைக்கொண்டு இரட்சிக்கத் தேடுவதும் அல்லது அவனல்லாதவரை அழைத்துப் பிரார்த்திப்பதும் ஷிர்க்கான காரியங்களாகும்

❀

திருக்குர்ஆன் ஆதாரங்கள்

وَلَا تَدْعُ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَنْفَعُكَ وَلَا يَضُرُّكَ فَإِنْ فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِنَ الظَّالِمِينَ وَإِنْ يَمْسَسْكَ اللَّهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهُ إِلَّا هُوَ وَإِنْ يُرِدْكَ بِخَيْرٍ فَلَا رَادَّ لِفَضْلِهِ يُصِيبُ بِهِ مَنْ يَشَاءُ مِنْ عِبَادِهِ وَهُوَ الْغَفُورُ الرَّحِيمُ

இன்னும், (நபியே!) அல்லாஹ்வைத் தவிர உமக்குப் பயனளிக் காதவற்றை மற்றும் உமக்கு இடர் செய்யாதவற்றை நீர் அழைத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டாம்; அவ்வாறு செய்வீராயின், நிச்சயமாக அச்சமயமே நீரும் அநியாயக் காரர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர்.

அல்லாஹ் உமக்கு ஓர் இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகிறவன் அவனைத் தவிர வேறு எவரும் இல்லை; மேலும், அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளைத் தடுப்பவர் எவரும் இல்லை. தன் அடியார்களில் அவன் நாடியவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு செய்கிறான்; அவனோ மிக்க மன்னிப்போன்; மிகக் கிருபை யுடையோன்.[50] (குர்ஆன் *10:106,107*)

50 அல்லாஹ் இத்திருவசனத்தில் துஆ (பிரார்த்தித்து அழைத்தல்) ஒரு வணக்கம் எனத் தெளிவுபடுத்தியுள்ளான். மேலும், இவ்வசனத்தின்

21

بَابُ مَا جَاءَ أَنَّ الْغُلُوَّ فِي قُبُورِ الصَّالِحِينَ يُصَيِّرُهَا أَوْثَانًا تُعْبَدُ مِنْ دُونِ اللهِ

நல்லோர்களின் சமாதிகளில் வரம்புமீறுவது அவர்களை அல்லாஹ்வைத் தவிர்த்து வணங்கப்படும் சிலைகளாக மாற்றிவிடுகின்றது[65]

❀

நபிவழி ஆதாரங்கள்

اللَّهُمَّ لاَ تَجْعَلْ قَبْرِي وَثَناً يُعْبَدُ، اشْتَدَّ غَضَبُ اللَّهِ عَلَى قَوْمٍ اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ

1. அல்லாஹ்வே! என்னுடைய கப்ரை வணங்கப்படும் சிலையாக ஆக்கிவிடாதே. தங்கள் நபிமார்களின் சமாதிகளை மஸ்ஜிதுகளாக எடுத்துக்கொண்டார்களே அந்தச் சமூகத்தார்மீது அல்லாஹ்வின் கோபம் கடுமையாக இருக்கின்றது என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அதாஉ இப்னு யஸார் ؒ, அல்முஅத்தா 414, ததீர் அஸ்ஸாஜித் 11 ஸஹீஹ்-அல்அல்பானீ)

أَفَرَأَيْتُمُ اللَّاتَ وَالْعُزَّى

65 நூலாசிரியர் இத்தலைப்பின் மூலம் நான்கு விசயங்களைக் குறிப்பிடுகிறார்: 1. நல்லவர்களின் கப்ருகளில் வரம்புமீறுவது குறித்து எச்சரிக்கையாக இருப்பது. 2. அவ்வாறு வரம்புமீறுவது அவர்களை வணங்கும் அளவுக்குக்கொண்டு செல்கின்றது. 3. அவ்வாறு அக்கப்ருகள் வணங்கப்பட்டால் அவற்றுக்குச் சிலைகள் என்றே கூறப்படும். 4. கப்ருகள்மீது கட்டிடங்கள் கட்டுவதற்கும், அவற்றை மஸ்ஜிதுகளாக மாற்றுவதற்கும் கடும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

25

بَابُ بَيَانِ شَيْءٍ مِنْ أَنْوَاعِ السِّحْرِ

சூனியத்தின் வகைகளில் சிலவற்றைப் பற்றிய விளக்கம்

❀

நபிவழி ஆதாரங்கள்

إِنَّ الْعِيَافَةَ وَالطَّرْقَ وَالطِّيَرَةَ مِنَ الْجِبْتِ

1. பறவையைப் பறக்க விட்டு எதிர்காலத்தைக் கணிப்பதும், பூமியில் கோடிட்டு சோதிடம் பார்ப்பதும், துர்ச்சகுனம் பார்ப்பதும் சூனிய வகையைச் சாரும் என நபி ﷺ அவர்கள் கூற தாம் கேட்டதாகக் கபீசா ؓ அறிவிக்கிறார்கள்.[73] (முஸ்னது அஹ்மது 20604)

அவ்ஃப் ؒ கூறுகிறார்கள்: 'இயாஃபா என்றால் பறவைகளைப் பறக்கவிட்டு எதிர்காலத்தைக் கணிப்பதாகும். தர்க் என்றால் பூமியில் கோடு வரைந்து சோதிடம் சொல்வதாகும்.'

ஹஸன் அல்பஸ்ரி[74] ؒ கூறுகிறார்கள்: 'ஜிப்த் என்றால் ஷைத்தானின் அழுகைச் சத்தமாகும்.'

73 ஒரு விசயத்தை நாடினால் அது நல்லதா? கெட்டதா? எனப் பார்ப்பதற்குப் பறவைகளை நோக்குகிறார்கள். அவை வலது பக்கமாகப் பறந்தால் நல்லதெனவும், இடது பக்கமாகப் பறந்தால் கெட்டதெனவும் தீர்ப்பளிக்கிறார்கள். இது பழங்கால மக்கள் சகுனம் பார்ப்பதற்குக் கையாண்டு வந்த முறையாகும். இதை இஸ்லாம் ஒழித்து நல்லவை கெட்டவை யாவும் அல்லாஹ்விடமிருந்தேதான் ஏற்படுகிறது எனக் கூறியது.

74 ஹஸன் பஸ்ரி: அபூ சயீது ஹஸன் இப்னு அபில்ஹஸன் ஆகிய இவர்கள், உமர் ؓ ஆட்சிக்காலத்தில் மதீனாவில் ஹிஜ்ரீ 21 (கி.பி. 642)இல் பிறந்தார்கள். நபித்தோழர் ஜைது இப்னு ஸாபித் அல்லது ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்

36

بَابُ مَا جَاءَ فِي الرِّيَاءِ

முகத்துதி குறித்து வந்துள்ளவை

❀

திருக்குர்ஆன் ஆதாரம்

قُلْ إِنَّمَا أَنَا بَشَرٌ مِثْلُكُمْ يُوحَى إِلَيَّ أَنَّمَا إِلَهُكُمْ إِلَهٌ وَاحِدٌ فَمَنْ كَانَ يَرْجُو لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا

(நபியே!) நீர் கூறுவீராக: நிச்சயமாக நான் உங்களைப் போன்று ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹ்யி மூலம் அறிவிக்கப்படுகிறது. ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கிறாரோ. அவர் நற்செயல்களைச் செய்யவும். தன் இரட்சகனின் வணக்கத்தில் அவர் யாரையும் இணையாக்க வேண்டாம். (குர்ஆன் 18:110)

நபிவழி ஆதாரங்கள்

قَالَ اللَّهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيهِ مَعِي غَيْرِى تَرَكْتُهُ وَشِرْكَهُ

1. ‘எனக்கு இணையாக ஆக்கப்பட்டவர்களின் இணையை விட்டும் நான் தேவையற்றவன். எவர் ஒரு நற்செயலைச் செய்து அதில் என்னுடன் நான் அல்லாத மற்றவரையும் கூட்டாக்கிவிடுவாரோ நான் அவரையும், அவரால் எனக்கு இணையாக ஆக்கப்பட்டவரையும் தனியே விட்டுவிடுவேன்’ என உயர்வானவனாகிய அல்லாஹ் கூறியதாக அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் *5708)*

41

بَابُ قَوْلِ اللهِ تَعَالَى {يَعْرِفُونَ نِعْمَةَ اللهِ ثُمَّ يُنكِرُونَهَا وأكثَرُهُمُ الكَافِرُونَ} (النَّحْلُ: ٨٣)

‘அல்லாஹ்வின் அருட்கொடையை அறிகின்றனர். பின்னர் அதனை நிராகரிக்கின்றனர்’ எனும் இறைவசனம்

❀

திருக்குர்ஆன் ஆதாரம்

يَعْرِفُونَ نِعْمَتَ اللَّهِ ثُمَّ يُنكِرُونَهَا وَأَكْثَرُهُمُ الْكَافِرُونَ

அல்லாஹ்வின் அருட்கொடையை அவர்கள் நன்றாக அறிகின்றனர். பின்னர் அதனை அவர்கள் நிராகரிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் (நன்றி கெட்ட) காஃபிர்களாகவே இருக்கின்றார்கள். (குர்ஆன் 16:83)

இந்தத் திருவசனத்திற்குப் பின்வருமாறு விரிவுரையாளர்கள் விளக்கம் கொடுத்துள்ளார்கள்: ஒருவர் தன்னிடமுள்ள சொத்தைக் காட்டி, ‘இவை செல்வங்கள். மூதாதையரிடமிருந்து நான் பெற்ற என்னுடைய வாரிசுச் சொத்தாகும்’ என்று கூறுவது, அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரிப்பவனின் சொல்லாகும் என்று முஜாஹிது ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘இன்னவர் இல்லையென்றால் இவ்வாறு நடந்திருக்காது’ என்று கூறுவதும் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரிப்பவனின் சொல்லாகும் என்று அவ்னு இப்னு அப்துல்லாஹ் ﵀ கூறியுள்ளார்கள். ‘இதை நாங்கள் எங்கள் கடவுள்களின் பரிந்துரைகளால் கிடைக்கப்பெற்றோம்’ என்று கூறுவதும் நிராகரிப்பவனின் சொல்லாகும் எனக் குதைபா ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்.

53

بابُ قَولِ اللهُمَّ اغْفِرْ لِي إنْ شِئْتَ

‘அல்லாஹ்வே! நீ நாடினால் மன்னிப்பாயாக’ என்று பிரார்த்திப்பது கூடாது

❀

நபிவழி ஆதாரங்கள்

لاَ يَقُلْ أَحَدُكُمُ اللَّهُمَّ اغْفِرْ لِي إِنْ شِئْتَ اللَّهُمَّ ارْحَمْنِي إِنْ شِئْتَ وَلْيَعْزِمْ الْمَسْأَلَةَ فَإِنَّ اللهَ لاَ مُكْرِهَ لَهُ

உங்களில் எவரும், ‘அல்லாஹ்வே! நீ நாடினால் பிழை பொறுத்தருள்வாயாக! அல்லாஹ்வே! நீ நாடினால் எனக்குக் கிருபை செய்வாயாக!’ என்று கூறவேண்டாம். அவர் கேட்பதை (அல்லாஹ் கொடுப்பான் என்ற) மன உறுதியோடு கேட்கட்டும். நிச்சயமாக அல்லாஹ்வை நிர்ப்பந்திப்பவர் யாருமில்லை என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, புகாரீ 7477)

இன்னொரு ஹதீஸில் வருகிறது:

وَلْيُعَظِّمِ الرَّغْبَةَ فَإِنَّ اللَّهَ لاَ يَتَعَاظَمُهُ شَيْءٌ أَعْطَاهُ

(அல்லாஹ்விடம் துஆ செய்பவர், தனது துஆவை அல்லாஹ் ஒப்புக்கொள்வான் என்ற) ஆவலை (அல்லாஹ்வின்பால்) அவர் பெரிதாக்கிக்கொள்வாராக. ஒருவரின் துஆவை ஏற்று அவருக்கு வெகுமதிகள் அளிப்பது அல்லாஹ்வுக்குப் பெரிய காரியமல்ல என நபி ﷺஅவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 2679)

61

بَابُ مَا جَاءَ فِي الْمُصَوِّرِينَ

உருவம் வரைவோரைப் பற்றிய விவரம்

❀

நபிவழி ஆதாரங்கள்

قَالَ اللهُ تَعَالَى: وَمَنْ أَظْلَمُ مِمَّنْ ذَهَبَ يَخْلُقُ كَخَلْقِي، فَلْيَخْلُقُوا ذَرَّةً أَوْ لِيَخْلُقُوا حَبَّةً أَوْ لِيَخْلُقُوا شَعِيْرَةً

1. என்னுடைய படைப்புகளைப் போல் உருவாக்குபவர் களைவிட அநியாயக்காரன் யாரும் உண்டா? (எவருமில்லை, அவர்கள் படைக்க விரும்பினால்) ஓர் அணுவைப் படைத்துப் பார்க்கட்டும்! அல்லது ஒரு வித்தையாவது படைத்துப் பார்க்கட்டும்! அல்லது ஒரு கோதுமையையாவது படைத்துப் பார்க்கட்டும் என அல்லாஹ் கூறியதாக நபி ﷺ அவர்கள் ஹதீஸ் குத்ஸீயில்[112] கூறினார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 2111)

أَشَدُّ النَّاسِ عَذَابًا عِنْدَ اللَّهِ يَوْمَ الْقِيَامَةِ الَّذِينَ يُضَاهُونَ بِخَلْقِ اللَّهِ

2. அல்லாஹ்வின் படைப்பைப்போல் (படைத்து) அதில் அல்லாஹ்வுக்கு ஒப்பாகின்றவர்கள் இறுதிநாளில் கடுமையான

112 ஹதீஸ் குத்ஸீ (الحديث القدسي): அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எவற்றை 'அல்லாஹ் கூறினான்' என்றோ, 'உங்கள் இறைவன் கூறினான்' என்றோ தன் வார்த்தைகளை அல்லாஹ்வுடன் இணைத்துக் கூறுகிறார்களோ அவற்றையும், அல்லது நபித்தோழர், 'நபியவர்கள் தம் இறைவனிடமிருந்து அறிவித்தார்கள்' என்று கூறினாரோ அவற்றையும் இந்தப் பெயரால் குறிப்பிடப்படும். ஹதீஸ் - நபிமொழி; குத்ஸீ - பரிசுத்தமானது. (கவாயித் அத்தஹ்தீஸ் மின் புநூன் முஸ்தலிஹ் அல்ஹதீஸ், ப: 65)

67

بَابُ مَا جَاءَ فِي قَوْلِ اللهِ تَعَالَى: {وَمَا قَدَرُوا اللهَ حَقَّ قَدْرِهِ وَالأَرْضُ جَمِيعًا قَبْضَتُهُ يَوْمَ الْقِيَامَةِ وَالسَّمَوَاتُ مَطْوِيَّاتٌ بِيَمِينِهِ سُبحَانَهُ وَتَعالى عَمَّا يُشْرِكُونَ} (الزُّمَرُ:٦٧)

‘அல்லாஹ்வை அவனுடைய கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் மதிப்பளிக்கவில்லை’ எனும் இறைவசனம் தொடர்பாக வந்துள்ளவை

❀

திருக்குர்ஆன் ஆதாரம்

وَمَا قَدَرُوا اللَّهَ حَقَّ قَدْرِهِ وَالْأَرْضُ جَمِيعًا قَبْضَتُهُ يَوْمَ الْقِيَامَةِ وَالسَّمَاوَاتُ مَطْوِيَّاتٌ بِيَمِينِهِ سُبْحَانَهُ وَتَعَالَى عَمَّا يُشْرِكُونَ

(நபியே!) அல்லாஹ்வை அவனுடைய கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் மதிப்பளிக்கவில்லை. இன்னும், பூமி அனைத்தும் மறுமைநாளில் அவனுடைய (ஒரு கைப்) பிடியிலும், வானங்கள் (அனைத்தும்) அவனுடைய வலக் கையிலும் சுருட்டப்பட்டவையாக இருக்கும். அவன் தூய வன். அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அவன் மிக உயர்ந்தவன். (குர்ஆன் 39:67)

நபிவழி ஆதாரங்கள்

جَاءَ حَبْرٌ مِنَ الأَحْبَارِ إِلَى رَسُولِ اللهِ صلى الله عليه وسلم فَقَالَ يَا مُحَمَّدُ إِنَّا نَجِدُ أَنَّ اللَّهَ يَجْعَلُ السَّمَاوَاتِ عَلَى إِصْبَعٍ وَالأَرَضِينَ عَلَى إِصْبَعٍ وَالشَّجَرَ عَلَى إِصْبَعٍ ، وَالْمَاءَ وَالثَّرَى عَلَى إِصْبَعٍ، وَسَائِرَ الْخَلاَئِقِ عَلَى إِصْبَعٍ، فَيَقُولُ أَنَا الْمَلِكُ فَضَحِكَ النَّبِيُّ صلى